**நவம்பர் – 14**

**"ஆகையால் உங்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள், மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும். உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக் கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்கள்."**

**- அப் 20 : 28 - 30.**

ஒழுங்கிற்காகவும், சோதனைக்காகவும், தேவனுடைய சபையின் முடிவான பரீட்ஷைக்காகவும் அவர்கள் இந்த பிரதிகூலமான சக்திகளுக்கு உட்பட்டிருக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. ஏனென்றால், இவைகளை ஜெயங்கொள்ளுகிறவனுக்கே அந்த மகா மேன்மையான பரிசின் வாக்குத்தத்தம் உரியதாகும். நாம் ராஜ்ஜியத்தில் கிறிஸ்துவோடு பங்கெடுக்க வேண்டுமானால், தேவனிடத்தில் பக்தி கொண்டவர்களாகவும், அவருடைய வார்த்தையில் விசுவாசமுள்ளவர்களாயிருக்கிறோமென்றும் சத்தியத்திற்காக வைராக்கியமுள்ளவர்களாய் இருக்கிறோமென்றும், நிந்தையையும், துன்பத்தையும் மரணபரியந்தம் பொறுமையுடன் சகிக்கிறோமென்றும் குறித்த காலத்திலே தம்முடைய சபையை விடுவித்து உயர்த்துவதற்குள்ள தேவனின் நோக்கத்திலும், வல்லமையிலும் தயங்காத நம்பிக்கையையும் கொண்டவர்களாயிருக்கிறோம் என்றும் அதே சோதனைகளினாலே நம்முடைய தகுதியை நாம் நிரூபிக்க வேண்டும். 91ம் சங்கீதத்தில் சொல்லப்பட்டிருக்கிற பாக்கியமான ஆறுதலான வார்த்தைகள் இந்தவிதமாக உண்மையுள்ளவர்களுக்கே உரியதாகும். -
**Z `04, 74 (R 3331)**

ஓநாய்கள் தேவனுடையவைகள் அல்ல. ஆனால் அவைகள், சாத்தானுடைய ஊழியக்காரரர்கள் அவர்கள் தீய நோக்கத்துடனும், அழியக்கூடிய நோக்கத்துடனும், தேவனுடைய ஜனங்களின் மத்தியில் வருகிறார்கள். ஆகையால், அவர்கள் தேவனுடைய மந்தையின் சேஷமத்தை அல்ல, ஆனால் அதன் உயிர் ரத்தத்தையே நாடுகிறார்கள். அவர்கள் பின்தொடர்ந்து பயமுறுத்துகிறார்கள். அவர்கள் அவருடைய மந்தையை கடிந்துபட்சிக்கிறார்கள். அவர்கள் மந்தையின் வயதானவைகளையும், குட்டிகளையும் தப்பிவிடுகிறதில்லை. சகோதரர் மத்தியில் எழுந்து உபதேசிக்கும் ஸ்தானத்தை வகித்துக்கொண்டு, அந்தஸ்தானத்தைக் கொண்டு, தேவனுடைய வார்த்தையின் உபதேசங்களை ஏமாற்றும் நோக்கத்துடன் மாறுதல்கள் செய்கிற இரண்டு வகுப்பார் இருந்திருக்கிறார்கள். திரள் கூட்டத்தாரும், பிரிவினையை உண்டாக்கிக்குற இரண்டாம் மரணத்துக்கேதுவானவர்களும். இந்த இரண்டு வகுப்பாரும் சத்தியத்தை புரட்டி, மாறுபாடான உபதேசங்களை போதிக்கிறார்கள். இது சம்பந்தமாக பிந்தினவர்கள் முந்தினவர்களைவிட, அதிகக்கெடுதல் செய்கிறார்கள். அவர்கள் தங்களுக்குச் சீடர்களை ஆதாயம் பண்ணுவதற்காகவே அப்படிச் செய்கிறார்கள். தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட வகுப்பார் இந்த மூன்று வகுப்பார் மேலும் கவனமாயிருக்கிறார்கள். சத்தியத்தை ஆராய்வதினாலும், அப்பியாசிப்பதினாலும், பரப்புவதினாலும் இவர்கள் அப்படி கவனமாயிருக்கிறார்கள்.
**- P `35, 171.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**ஏரே 23:1; எசே 34:1-10; யோவா 10:12; மத் 7:15; எபி 6:4-6; 10:26-29; 2பேது 2:1,22; யூதா 3-19;**

**2தீமோ 1:19,20.**

**கோபுர வாசிப்பு : Z `14, 29 (R 5388).**

**வினாக்கள் : இந்த வசனம் சம்பந்தமாக இந்த வார அனுபவங்கள் என்ன? எந்த சந்தர்ப்பங்களில் அவை நேர்ந்தன? அவை எதில் முடிந்தன?**